# புறுக் பாடசாலை, பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கிடையிலான ஒத்துளைப்பு பற்றிய ஒப்பந்தங்கள்

1. பள்ளித்தலைவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் சமத்துவமான ஒத்துழைப்பிற்க்கு பொறுப்பேற்க்க வேண்டும்.

2. பள்ளித்தலைவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களும் மாணவர்களும் ஒருவரை ஒருவர் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் சந்திக்க வேண்டும். வன்முறை மற்றும் வன்முறை அச்சுறுத்தல்கள் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. ஆசிரியர்கள்…
   - மாணவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கேற்ப ஊக்குவித்தல், ஆதரவழித்தல் மற்றும் ஊக்குவிக்கும் கற்றல் சூழலை உருவாக்குதல்.
   - பாடத்திட்டம் சம்பந்தமான விடயங்களிற்க்கு பொறுப்பாளராவார்.
   - செயல்த்திறன், கற்றல் மற்றும் நடத்தை பற்றிய தகவல்களை தவறாமல் பெற்றோருக்கு ஒரு பொருத்தமான வடிவத்தில் தெரிவிக்க வேண்டும்.
   - காலாண்டு மற்றும் அரையாண்டு திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளுக்கான தகவல்களை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.
   - பொருத்தமான கால இடைவெளிகளில் தொடர்கல்விக்கான மேற்ப்படிப்பை மேற்க்கொள்தல் வேண்டும்.
   - ரகசியத்தன்மை மற்றும் தரவுப்பாதுகாப்புகளை மதிக்க வேண்டும்.

4. பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் பாடசாலை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடவேண்டும்.
   - நீங்கள்..
     - வீட்டு நடத்தை, கல்விச்சிக்கல், சிறப்பு நிகழ்வுகள் மற்றும் அவரவர் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் சுகாதார சிறப்பம்சங்கள் பற்றிய தகவல்களை உரிய ஆசிரியர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
     - பேற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் கூட்டங்களில் பங்கேற்க்க வேண்டும். தவறும்பட்சத்தில் உரிய ஆசிரியரிடம் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.
     - தங்கள் பிள்ளைகளின் பாடசாலை நிகழ்வுகளில் பங்கேற்க்க வேண்டும்.
     - பள்ளியில் அவரவர் குழந்தைகளின் நிலைபற்றி தொடர்ந்து பேசுங்கள்(வீட்டுப்பாடங்கள், சிரமங்கள், கல்வி முன்னேற்றங்கள், பரீட்சைகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள்).
     - பள்ளிவிதிகளுடன் இணங்குதல் வேண்டும்.
     - பிள்ளைகளிடம் கொடுத்தனுப்பப்படும் தகவல்களை தவறாமல் வாசிக்கவும்.

5. உணவுப்பழக்கவழக்கம், உடற்ப்பயிற்சி, தூக்கம் மற்றும் ஓய்வு-
   - ஆசிரியர்கள்..
     - கல்வித்திட்டத்திற்க்கமைய தங்கள் உணவுப்பழக்கவழக்கங்களை நெறிப்படுத்தல் வேண்டும்.
     - இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்குமான அன்றாட பள்ளி வாழ்க்கையில் தேவையான செயல்த்திட்டங்களை ஏற்ப்பாடு செய்துள்ளனர்.
   - பள்ளி தினப்பராமரிப்பு..
     - மதியபோசன வேளைகளிலும், நொறுக்குத்தீனிகளிலும் ஆரோக்கியமான மற்றும் சீரான உணவு முறைகள் உறுதிசெய்யப்படும்.
     - மாணவ மாணவிகளிற்க்கான முன்னேற்றங்களுக்காக சிறப்புச்சலுகைகள்(விளையாட்டு,கலை,இசை மற்றும் நாடகங்கள்) வழங்கப்படுகின்றன.

   - பேற்றோர் மற்றும் பாதுகாவலர்கள்-
     - உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பான விடயங்களில் கவனமெடுத்தல் வேண்டும்.
     - உங்கள் குழந்தைகள் காலை உணவு உட்க்கொண்டிருத்தல் வேண்டும், மேலும் சிற்றுண்டிகளை கொடுத்தனுப்பதல் வேண்டும்.
     - நாழிற்க்கொருமுறையேனும் குழந்தைகளுடன் ஒன்றாக அமர்ந்து உணவருந்த வேண்டும்.
     - உங்கள் குழந்தைகளின் உடற்ப்பயிற்சிக்கு வழிவகுத்தல் வேண்டும்(விளையாட்டுத்திணைக்களத்தின் பரிந்துரைதலுக்கேற்ப்ப நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலம் என்ற முறையில் பயிற்சிசெய்தல்.)
     - உங்கள் குழந்தைகள் போதுமான அளவு நித்திரை செய்திருத்தல் வேண்டும்.(பரிந்துரைக்கேற்ப்ப :- 10 வயதிற்க்குட்ப்பட்டவர்கள் 10 முதல் 11 மணிநேரம்வரை, 10-13 வயதிற்க்குட்ப்பட்டவர்கள் 9-10 மணிநேரம்வரை, 14 வயதிற்க்கு மேற்ப்பட்டோர் 8-9 மணிநேரம்வரை என்ற அளவில் உறங்கியிருத்தல் வேண்டும்).
     - உங்கள் குழந்தைகள் சுயமாக பள்ளி சென்றுவர வேண்டும்.
     - உங்கள் குழந்தைகள் ஓய்வு நேரத்தில் செய்யும் செயற்ப்பாடுகளை அறிந்திருத்தல் வேண்டும்.

6. ஊடக நுகர்வு-

   - ஆசிரியர்கள்…
     - கைத்தொலைபேசிகளை பள்ளிமுகாம் மற்றும் சுற்றுலா வேளைகளில் மட்டுமே அனுமதிப்பார்கள்.
     - வகுப்பறைகளில் டியிட்டல் கருவிகள் பயன்படுத்துவதற்க்கான விதிமுறைகள், இணையத்தின் விவேகம் மற்றும் பாதுகாப்பான பயன்பாடு ஆகியவை தொடர்ந்து கருத்தில்கொள்வார்கள்.
     - படங்கள் மற்றும் காணொளிகளை மாணவர்களின் வயதுக்கட்டுப்பாட்டு விதிகளிற்க்கேற்ப்ப அமைகின்றனவா என அவதானிப்பார்கள்.
   - பள்ளி தினப்பராமரிப்பில் ஊடகத்தின் அர்த்தமுள்ள பயன்பாடு குறித்து கவனம் செலுத்துவார்கள்.

   - பேற்றோர் மற்றும் பாதுகாவலர்கள்-
     - தோலைக்காட்சி, கணினி மற்றும் விளையாட்டு செயலிகள் ஆகியன சிறுவர்களின் அறையினுள் இடம்பெறவேண்டிய பொருட்கள் அல்ல என்பதனை தெரிந்திருத்தல் வேண்டும்.
     - படங்கள் மற்றும் காணொளிகளை குழந்தைகளின் வயதுக்கட்டுப்பாட்டு விதிகளிற்க்கேற்ப்ப அமைகின்றனவா என அவதானித்தல் வேண்டும்.
     - ஊடக பாவனைவிதிகளை ஏற்ப்படுத்தல்(6-9 வயதினர் 60 நிமிடங்களும், 10-13 வயதினர் 90 நிமிடங்களும் என்ற வகையில்).

ஒரு பணிக்குளு ( பள்ளி ஆணைய உறுப்பினர்கள், பெற்றோர்சபை மற்றும் ஆசிரியர்கள்) இந்த ஒப்பந்தங்களை வகுத்துள்ளனர். அவை பள்ளி ஆணையம் மற்றும் பள்ளி நிர்வாகத்தால் 04.02.2010 கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மார்கழி 2020ல் பள்ளி நிர்வாகத்தால் திருத்தப்பட்டது.

நாங்கள் இந்த ஒப்பந்தத்தை படித்து, கவனத்தில் எடுத்துக்கொண்டோம். கையெழுத்தின் மூலம் எங்கள் ஒத்துழைப்பு இந்த கோட்பாடுகளின் அடிப்படையில் உள்ளது என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

குழந்தையின் பெயர்:-………………………………………………………………….

திகதி,…………………………  பெற்றோர் கையொப்பம்:-…………………………………..

பள்ளி நிர்வாகம்

திகதி:-………………………..

பிரிவு 1:-…………………………………….(M.Bilat)

பிரிவு 2:-…………………………………….(U.Schor)

பிரிவு 3:-…………………………………….(M.Rosin)